**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF, SHENCOTTAH**

O.S.No.88/2018

Deposition of witness for DW2

| | | |
|---|---|---|
| Name | : | பழனிச்சாமி |
| Father's Name | : | முத்தையா தேவர் |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 70 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 23.06.2026.

<u>முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கில் 3ம் நபர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன். எனது தரப்பில் எந்த ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

**குறுக்குவிசாரணை (வாதி தரப்பில்)**

1. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் எனது வீட்டின் கதவு எண் கூறவில்லை என்றால் சரிதான். எனக்கு வாதி, பிரதிவாதிகள், சுவாதீனம் என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியாது. சுவர் சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியும். யார், யார் மீது வழக்கு தாக்கல்

செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியும். 1ம் பிரதிவாதி அழைத்தன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இடம் பிரச்சனை என்றுதான் கூறினார், வேறு எதுவும் சொல்லலவில்லை. நான் வழக்கு ஆவணங்களை படித்துப்பார்க்கவில்லை.

2. பிரதிவாதி தான் ஏற்படுத்திய பத்திரத்தில் கீழச்சுவர், கதவுகள் ஏற்படுத்தக்கூடாது என்ற ஆவணத்தை பற்றி எனக்கு தெரியாது. விவரங்களை தெரிந்து கொண்டே தெரியாது என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் பிராது தபசில் சொத்திற்கு எந்த திசையில் குடியிருந்துவருகிறேன் என எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான், ஆனால் 2ம் வாதியின் வீட்டிற்கு கீழ்திசையில் குடியிருந்துவருகிறேன்.

3. எனக்கும், வாதிகளுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு 2ம் வாதி எனது மகனுக்கு சட்டஅறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் சரிதான். அதற்கு பிற்பாடு எனக்கும், வாதிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரிதான். இதனால் எனக்கு, வாதிகளுக்கு எதிராக மனதில் பாதிப்பு ஏற்பட்டது என்றால் சரிதான்.

4. நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வாதியின் மீதுள்ள மனஸ்தாபத்தின் காரணமாகதான் நான் வாதிகள் மீது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. 1ம் பிரதிவாதியின் தந்தை கிரையம் வாங்கிய சொத்தின் விவரம் எனக்கு தெரியாது. நான் அட்வான்ஸ் போட்ட இடத்தை தான் சுப்பம்மாள் கிரையம் வாங்கியுள்ளார். மண்சுவர் இடித்துதான், பிரதிவாதி அஸ்திவாரத்தில் இருந்து வீடுகட்டியுள்ளார். அளந்துபார்த்துகட்டினார்களா அல்லது யார் இடத்தில் அஸ்திவாரம் அமைத்து கட்டினார்கள் என்று நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**ஒப்பம்/- K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**